நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 25.11.2022.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2022ம் வருடம் நவம்பர் மாதம் 30ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>30.11.2022</td><td>183</td><td>
<u>பொருள் எண். 01</u>
களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகள் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் விபரங்கள் ஆகியவற்றை 09/2022 மற்றும் 10/2022 ஆகிய மாதங்களில் பதிவு செய்த விபரம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">மாதம்</th><th colspan="3">பிறப்பு</th><th colspan="3">இறப்பு</th><th colspan="3">இறந்து பிறந்தவை</th></tr>
<tr><th>ஆன்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆன்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆன்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1.</td><td>செப்டம்பர்</td><td>69</td><td>51</td><td>120</td><td>13</td><td>12</td><td>25</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
<tr><td>2.</td><td>அக்டோபர்</td><td>53</td><td>56</td><td>109</td><td>17</td><td>18</td><td>35</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
</table>
</td><td>பார்வையிடப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>184</td><td>
<u>பொருள் எண். 02</u>
களக்காடு நகராட்சி பகுதிகளில் மொத்தம் 19 அங்கன்வாடிகள் செயல்பட்டு வருகின்றன. அதில் கீழ்கண்ட அங்கன்வாடி மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை குழந்தைகளின் நலன் கருதி உடனடியாக சரி செய்து தரக்கேட்டு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், களக்காடு அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. மேலும் பழுதுகளை சரி செய்யவும், அதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>அங்கன்வாடி மையத்தின் பெயர்</th><th>பழுதின் விவரம்</th></tr>
<tr><td>1.</td><td>பெருமாள் கோவில் – வார்டு எண்.11</td><td>தரைதளம் மற்றும் மேல்கூரை</td></tr>
<tr><td>2.</td><td>வடமலைசமுத்திரம்–வார்டு எண். 6</td><td>தரைதளம் மற்றும் கதவு ஜன்னல்கள்</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு :</u><br>நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களில் ஏற்படும் பழுதுகளை நகராட்சியின் பொது நிதியிலிருந்து பணி செய்து கொடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து பணி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>185</td>
<td><u>பொருள் எண். 03</u><br>களக்காடு நகராட்சியில் 2 பொதுக் கழிப்பிடங்கள், 14 சமுதாய கழிப்பிடங்கள் கீழ்கண்ட இடங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் 12 கழிப்பிடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பொதுமக்கள் பயன்படுத்திடவும், திறந்தவெளியில் மலம் கழிப்பதை தடுக்கவும், பழுதடைந்த கழிப்பிடங்களை சரி செய்து தரக்கேட்டு துப்புரவு ஆய்வாளர் அவர்களின் அறிக்கையின்படி, மதிப்பீடு தயார் செய்து பணிகள் செய்திடவும், மேலும் அதற்காகும் செலவுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வார்டு எண்.</th><th>கழிப்பிடங்கள் அமைந்துள்ள இடம்</th></tr>
<tr><td>1.</td><td>02</td><td>மஞ்சுவிளை – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>2.</td><td>04</td><td>கீழப்பத்தை – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>3.</td><td>06</td><td>வடமலைசமுத்திரம் – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>4.</td><td>07</td><td>கீழக்கருவேலன்குளம் – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>5.</td><td>10</td><td>சிவசண்முகபுரம் – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>6.</td><td>10</td><td>பாரதிபுரம் – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>7.</td><td>11</td><td>சரோஜினிபுரம் – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>8.</td><td>11</td><td>பெருமாள் கோவில் தெரு – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>9.</td><td>26</td><td>கோவில்பத்து செட்டியார் தெரு – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>10.</td><td>27</td><td>கோவில்பத்து பெரிய தெரு – சமுதாயக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>11.</td><td>19</td><td>புதிய பேருந்து நிலையம் – பொதுக் கழிப்பிடம்</td></tr>
<tr><td>12.</td><td>20</td><td>பழைய பேருந்து நிலையம் – பொதுக் கழிப்பிடம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>நகராட்சியின் பொது சுகாதார நலன் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்திடவும், பழுதடைந்துள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் பொதுக் கழிப்பிடங்களை சரி செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்யவும், மேலும் அதற்காகும் செலவுத் தொகையினை பொதுநிதியிலிருந்து செலவிடவும் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td>30.11.2022</td><td>186</td><td>

<u>**பொருள் எண். 04**</u>

களக்காடு நகராட்சியானது மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. இங்கு விவசாய பகுதிகள் அதிகமாக உள்ளதால் நகராட்சியின் மையப்பகுதி வழியாக ஆறுகள், கால்வாய்கள் மற்றும் குளங்களுக்கு செல்லும் நீர் ஓடைகள் ஆகியவை உள்ளன. தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி இருப்பதால், அதிக வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது பாலங்களில் அடைப்பு ஏற்படுகிறது. எனவே, பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள அமலை செடிகள் மற்றும் மண்திரடுகள் ஆகியவற்றை அகற்றவும், மேலும் இந்நகராட்சியின் மையப் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று குளங்கள் உள்ளது. அக்குளங்களுக்கு தண்ணீர் வரும் ஓடையில் உள்ள முட்செடிகள் மற்றும் அடைப்புகளை கிட்டாச் இயந்திரம் மூலம் அரசு நிர்ணயித்துள்ள விலைக்கே செய்து கொடுத்த நிறுவனத்திற்கு அட்டவணையில் கண்டுள்ள தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>விநாயகா எர்த் மூவர்ஸ்,<br>படலையார்குளம்.</td><td>43200</td></tr>
</table>

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

இந்நகராட்சியானது மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ளதால் வடகிழக்கு பருவமழை காலங்களில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்படுவதால் பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள அமலை செடிகள் மற்றும் மண்திரடுகள் ஆகியவற்றை கிட்டாச் இயந்திரம் மூலம் அகற்றிய வகைக்கு தொகை வழங்க அனுமதிக்கலாம்.

</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>187</td><td>

<u>**பொருள் எண். 05**</u>

களக்காடு நகராட்சி 17 ச.கி.மீ. பரப்பளவில் உள்ளது. மொத்தம் 27 வார்டுகளை கொண்டுள்ளது. 11704 குடியிருப்புகள் உள்ளது. தற்போதைய சராசரி மக்கள் தொகை 34100 ஆக இருந்து வருகிறது. இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் (ODF) திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்து இந்நகராட்சியினை திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி என்று சான்று (ODF++) பெறுவதற்காகவும், நாளிதழில் வெளியிடுவதற்கும் நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு. மேலும் அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>**அலுவலகக்குறிப்பு**</u> :

இந்நகராட்சியினை திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சி என்று சான்று (ODF++) பெறுவதற்காகவும், நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவுத் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>188</td><td>

<u>**பொருள் எண். 06**</u>

களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் வீடுகள் தோறும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பொது சுகாதார வாகனத்தின் (TATA Ace) (வாகன எண்.

</td><td>சுகாதார ஆய்வாளரின் அறிக்கையி ன்படி, வாகன பழுது சரி</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | TN72AU6638) மோட்டார் வாகன தரச்சான்று 12/2022ம் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தின் தரச்சான்றினை புதுப்பிக்கவும், பொது சுகாதார வாகன பழுதுகளை நீக்கம் செய்து தரக் கேட்டு களக்காடு நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>இந்நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு இயக்கப்பட்டு வரும் வாகனத்திற்கு (TATA Ace) (வாகன எண். TN72AU6638) தரச்சான்று பெற வேண்டியுள்ளதால், வாகனத்தில் உள்ள பழுதினை சரி செய்வதற்கும, அதற்காகும் செலவுத் தொகையினை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | செய்ய அனுமதிக்கப் பட்டது. |
| 30.11.2022 | 189 | **<u>பொருள் எண். 07</u>**<br>களக்காடு நகராட்சி எல்கை பகுதியில் பிறந்த குழந்தைகளின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை 2013 ஆம் ஆண்டு முதல் முன்பு பேரூராட்சியில் பிரிமேட்டிக்ஸ் மென்பொருளில் பதிவேற்றம் செய்து சான்றுகள் வழங்கப்பட்டு வந்ததை 2018ம் ஆண்டு முதல் தமிழகம் முழுவதும் பிறப்பு இறப்பு பதிவுகளை ஒரே மென்பொருளில் (இணையம்) பதிவு செய்து வழங்கிட மாவட்ட பொது சுகாதார துறையின் மூலம் அறிவுறுத்தப்பட்டு 01.01.2018ம் ஆண்டு முதல் CRS Web Portal இணையத்தில் பதிவேற்றம் செய்து சான்று வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து 2018 ஆம் ஆண்டு முந்தைய ஆண்டுகளில் உள்ள பதிவுகளையும் Web Portalல் பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. இதற்கு வெளிக்கொணர்வு ஆட்களை கொண்டு பதிவு செய்யவும், ஒரு விண்ணபத்திற்கு ரூ. 2/- வீதம் வழங்குவதாக சம்பந்தப்பட்ட துறையின் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் மொத்தம் 10628 பதிவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டது. அதற்கான தொகை ரூ. 21256/- நகராட்சி வங்கி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளதை கீழ்கண்ட நபர்களுக்கு வழங்க மன்றத்தின் தகவலுக்கு.<br><table><tr><th>வ. எண்.</th><th>பெயர்</th><th>பதிவுகளின் எண்ணிக்கை</th><th>தொகை</th></tr><tr><td>1.</td><td>பமிலா</td><td>2064</td><td>4128</td></tr><tr><td>2.</td><td>பிரியா</td><td>2187</td><td>4374</td></tr><tr><td>3.</td><td>கற்பகவள்ளி</td><td>2117</td><td>4234</td></tr><tr><td>4.</td><td>சங்கர்</td><td>2259</td><td>4518</td></tr><tr><td>5.</td><td>பவித்ரா</td><td>2001</td><td>4002</td></tr><tr><td></td><td>**மொத்தம்**</td><td>**10628**</td><td>**21256**</td></tr></table>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>இந்நகராட்சியில் உள்ள பிறப்பு இறப்பு பதிவுகளை CRS Web Portal-ல் 2013 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பதிவேற்றம் செய்வதற்கு மாவட்ட பொது சுகாதார துறையின் மூலம் வழங்கப்பட்ட தொகையினை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு 22.11.2022 அன்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கப்பட்ட விபரம் தகவலுக்கு. | பார்வையிடப் பட்டது. |

<table>
<tr>
<td>30.11.2022</td>
<td>190</td>
<td>
<u>பொருள் எண். 08</u><br>
களக்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் வீடுகள் தோறும் பணியாளர்கள் மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்து சேகரித்து உரமாக்கப்பட்டு வருகிறது. தற்போது பொதுமக்களாகவே அவர்களது குப்பைகளை பிரித்து வழங்குவதற்காக நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் துண்டு பிரசுரம் மற்றும் பிளக்ஸ் பேனர் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி குப்பைகளை தரம்பிரித்து வழங்கிட துண்டு பிரசுரம் மற்றும் பிளக்ஸ் பேனர் அச்சடித்து வழங்கிய வகைக்கு கிளாடன் டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங், களக்காடு பட்டியல்படி தொகை வழங்கவும், அத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும், மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>குப்பைகள் தரம் பிரித்தல் பிளக்ஸ் (Source Segregation Awareness Flex)</td><td>5</td><td>4500</td></tr>
<tr><td>2.</td><td>செல்ஃபி பாயிண்ட் பிளக்ஸ் (Selfie Point Flex)</td><td>1</td><td>3500</td></tr>
<tr><td>3.</td><td>ஸ்டிக்கர்ஸ் (Stickers)</td><td>1000</td><td>10000</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>1006</td><td>18000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>
இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதாரத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் வீடுகள் தோறும் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரம் மற்றும் பிளக்ஸ் பேனர் அச்சிட்டு வழங்கிய வகைக்கு பொதுநிதியிலிருந்து தொகை வழங்க அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>191</td>
<td>
<u>பொருள் எண். 09</u><br>
களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தின் கீழ் வார்டு எண். 22, அந்தோணியார் கோவில் தெரு அருகில் ரூ. 31.28 இலட்சத்தில் பொது கழிப்பிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18856/2022/தூஇதி2, நாள். 13.07.2022ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியினை செய்திட 02.09.2022 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி பெற்று, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் தகுதியான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத்தை அங்கீகரிக்க வேண்டி களக்காடு நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒப்பந்ததாரருக்கு 09.09.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகளை மேற்கொள்ளும் பொழுது வார்டு எண். 19ல் உள்ள இஸ்லாமிய சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட செய்கு லெப்பை நயினார் அவுலியா தர்காவிற்கு சொந்தமான இடம் என்று முதன்மை செயல் அலுவலர், வள்ளல் சீதக்காதி நகர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 11145/20/ஆ1/தி.வேலி, நாள். 11.11.2022 அன்று வரப்பெற்ற கடிதத்தின்படி, மேற்படி பொது சுகாதார கழிப்பிடம் கட்டுவதற்கு இடப்பிரச்சனை இருப்பதால் இத்திட்டத்தை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளதை இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் இப்பணியினை செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலகக்குறிப்பு :</u><br>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது கழிப்பிடம் கட்டுவதற்கான இடத்தில் இடப்பிரச்சனை இருப்பதால் இத்திட்டத்தில் கட்டப்படவுள்ள பொது கழிப்பிடத்தை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் சிதலமடைந்து உள்ளதை புதுப்பிக்க வேண்டி இருப்பதால் இத்திட்டத்தினை புதிய பேருந்து நிலைய கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு கட்டுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.11.2022</td><td>192</td><td><u>பொருள் எண். 10</u><br>களக்காடு நகராட்சியில் 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் 75வது சுதந்திர தின அமுத பெருவிழா கொண்டாடுவதற்காக நகராட்சி பகுதியில் உள்ள 12000 குடியிருப்பு கட்டிடங்களிலும் 11.08.2022 முதல் 17.08.2022 வரை தேசிய கொடியை பறக்க விடுவதற்கு ஏதுவாக நகராட்சியின் மூலம் அரசு நிர்ணயித்துள்ள 30" : 20" என்ற அளவில் தேசிய கொடி வாங்கி அனைத்து குடியிருப்புகளுக்கும் வழங்கிடவும், அதற்கான செலவு தொகையினை பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக வசூலித்து தேசிய கொடி வழங்கிய நிறுவனத்திற்கு தொகை வழங்கிடவும், தற்போது வரப்பெற்ற பட்டியல் தொகைக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிடவும், வழங்கிய தொகைக்கு நன்கொடை மூலம் வசூலிக்கப்படும் தொகையினை நகராட்சி பொதுநிதி கணக்கிற்கு ஈடு செய்யப்படும் என்ற விபரம் மன்றத்தின் தகவலுக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>எண்ணிக்கை</th><th>விலை</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1.</td><td>ரம்யா டெக்ஸ்டைல்ஸ், செட்டியார்பட்டி, இராஜபாளையம்.</td><td>9000</td><td>21</td><td>189000</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>இந்நகராட்சியில் 75வது சுதந்திர தின அமுதப் பெருவிழாவை முன்னிட்டு நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றும் விதமாக தேசிய கொடி தைத்து வழங்கிய நிறுவனத்திற்கு பட்டியல் படி தொகை ரூ. 1,89,000/- (12.10.2022 அன்று 100000/- மற்றும் 02.11.2022 அன்று 89000/-) வழங்கப்பட்டுவிட்டது. வழங்கப்பட்ட தொகையினை நன்கொடையாளர் மூலம் வசூல் செய்யப்பட்டு நகராட்சி பொது நிதியில் வரவாக்கப்பட்டுள்ள விபரத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>193</td><td><u>பொருள் எண். 11</u><br>களக்காடு நகராட்சி பகுதியில் தெருக்களில் சுற்றித்திரிந்த ஆண் மற்றும் பெண் நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய நகர்மன்றத்தில் 28.09.2022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட், ருக்குமணிபுரம், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி 29.10.2022 முதல் 02.11.2022 வரை நான்கு தினங்களாக ஆண் நாய் 199, பெண் நாய் 25 மொத்தம் 224 நாய்கள் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அந்நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியலுக்கான தொகை ரூ. 156800/-ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>நாய் ஒன்றுக்கு ரூ.</th><th>மொத்த தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>199</td><td>25</td><td>224</td><td>700</td><td>156800</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>
இந்நகராட்சி பகுதியில் சாலையில் சுற்றித் திரிந்த தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்தமைக்கு தொகை வழங்க அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td>30.11.2022</td><td>194</td><td>
<u>பொருள் எண். 12</u><br>
களக்காடு நகராட்சி வார்டு எண். 20ல் பொதுமக்களின் அத்தியாவசிய கீழ்கண்ட பணிகளை செய்து தர கேட்டு வார்டு எண். 20, நகர்மன்ற வார்டு உறுப்பினர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>
1. முஸ்லீம் கீழத்தெருவில் நான்குனேரியான் கால்வாயில் தடுப்புசுவர் அமைத்தல்.<br>
2. கண்ணார் கோவில் தெருவில் புதிதாக சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.<br>
3. பஸ்ஸ்டாண்ட் கீழத்தெரு மற்றும் கால்நடை மருத்துவமனை அருகில் புதிதாக தெருவிளக்கு அமைத்தல்.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>
அத்தியாவசிய பணிகளை பொது நிதி திட்டத்தில் உரிய திட்ட மதிப்பீடு தயாரித்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உரிய அனுமதி பெற்று பணிகள் செய்ய அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>195</td><td>
<u>பொருள் எண். 13</u><br>
களக்காடு நகராட்சி வார்டு எண். 8, கீழக்கருவேலன்குளம் பேருந்து நிறுத்தத்தில் புதிதாக LED தெருமின்விளக்கு அமைத்து தர கேட்டு வரப்பெற்ற வார்டு உறப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>
இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் LED விளக்குகளாக அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உரிய அனுமதி கேட்டு திட்டக்கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் புதிய தெரு விளக்குகள் அமைக்க நகராட்சி பொறியாளர்கள் மூலம் அளவீடு செய்து அரசின் விதிகளுக்கு உட்பட்டு மதிப்பீடு தயாரித்து அரசின் திட்டநிதி கிடைக்கப் பெற்று புதிய விளக்குகள் அமைத்து கொடுக்க அங்கீகரிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.11.2022</td><td>196</td><td>
<u>பொருள் எண். 14</u><br>
களக்காடு நகராட்சி வார்டு எண். 4, கீழப்பத்தை முதல் சிவன் கோவில் வரை புதிதாக LED தெருமின் விளக்கு மற்றும் வாறுகால் அமைத்து தரக்கேட்டு வரப்பெற்ற வார்டு உறுப்பினர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>
இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் LED விளக்குகளாக அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உரிய அனுமதி கேட்டு திட்டக்கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் புதிய தெரு விளக்குகள் அமைக்க நகராட்சி பொறியாளர்கள் மூலம் அளவீடு செய்து அரசின்
</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>விதிகளுக்கு உட்பட்டு மதிப்பீடு தயாரித்து அரசின் திட்டநிதி கிடைக்கப் பெற்று புதிய விளக்குகள் அமைத்து கொடுக்க அங்கீகரிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>197</td>
<td><u>பொருள் எண். 15</u><br>களக்காடு நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் மூலம் பொதுமக்கள் பங்குத் தொகை மற்றும் அரசு பங்குத் தொகையுடன் சேர்த்து பணிகள் செய்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் செயல்முறைகள் ந.க.எண். 27519-55/2021/P2, நாள். 17.11.2022ன்படி கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி கௌதம நதிக்கரையில் படித்துறை கட்டும் பணி.</td><td>8.30</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சி பழைய பேருந்து நிலைய கழிப்பிடம் பழுது பார்க்கும் பணி.</td><td>2.50</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>இந்நகராட்சியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களாகவே முன்வந்து தங்களுக்கு தேவையான பணியினை தேர்வு செய்து அதற்கான பங்குத் தொகை ரூ. 4.30 இலட்சம் செலுத்தி உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் தகவலுக்கு.</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>198</td>
<td><u>பொருள் எண். 16</u><br>களக்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பொது சுகாதார பயன்பாட்டிற்காக வீடுகள் தோறும் சென்று குப்பைகள் சேகரிக்க பயன்பட்ட வரும் மினிலாரி வாகனத்திற்கு மோட்டார் வாகன தரச்சான்று பெறவும், பழுதுகளை சரி செய்வதற்கு நகர்மன்றத்தில் தீர்மானம் (தீர்மான எண். 116/28.07.2022) நிறைவேற்றப்பட்டு பழுதுகளை சரி செய்து வழங்கிய நிறுவனத்திற்கு பட்டியல்படி தொகை ரூ. 89015/- வழங்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் தகவலுக்கு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீ விநாயகா மோட்டார் ஒர்க்ஸ், அம்பாசமுத்திரம்.</td><td>89015/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>திடக்கழிவு மேலாண்மை திட்டம் பொது சுகாதார வாகனம் பழுது நீக்கம் செய்ததற்கு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.11.2022</td>
<td>199</td>
<td><u>பொருள் எண். 17</u><br>களக்காடு நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் மற்றும் கொசுமருந்து ஆகியவை வாங்கிய வகைக்கு மகாராஜன் கெமிக்கல்ஸ், களக்காடு நிறுவனத்திற்கு பட்டியல்படி தொகை ரூ. 103000 வழங்கியது மன்றத்தின் தகவலுக்கு.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :<br>இந்நகராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் இதர பயன்பாட்டிற்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு 04/2022 மாதத்தில் பட்ஜெட் மற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொருட்கள் கொள்முதல் செய்த வகைக்கு தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>200</td>
<td><u>பொருள் எண். 18</u><br>களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டிற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் குளம் பராமரிப்பு பணி செய்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (SS & FC) எண். 18, நாள். 21.10.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 8879/2022/P1, நாள். 02.11.2022ன்படி கீழ்கண்ட பணி செய்ய அனுமதி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி வார்டு எண். 20, சர்வே எண். 692, மாணிக்கன்குளம் தூர்வாருதல் மற்றும் நடைபாதை அமைத்தல் பணி.</td><td>50.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> :<br>இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பணிகள் செய்ய உரிய நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் தகவலுக்கும் அங்கீகாரத்திற்கும்.</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.11.2022</td>
<td>201</td>
<td><u>பொருள் எண். 19</u><br>களக்காடு நகராட்சியில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு 15வது நிதிக்குழு மான்ய (டைய்டு) திட்டத்தில் குடிநீர் மற்றும் பொது சுகாதார பணிகள் செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 31116/2021/CFC, நாள். 06.10.2022ன்படி கீழ்கண்ட பணி செய்ய அனுமதி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>இளவடியான் கால்வாயில் அமைக்கப்படவுள்ள திறந்தவெளி கிணறு முதல் சிதம்பராபுரம் OHT வரை 200 mm HDPE பைப் பம்பிங் மெயின் அமைத்தல் (1800 மீ)</td><td>42.00</td></tr>
</table></td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 2. | களக்காடு நகராட்சியில் வடகரை மற்றும் நீரேற்றும் நிலையத்தில் 2000 லி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்க தொட்டி மற்றும் 2 எண்ணம் 35 LPH திரவநிலை குளோரினேஷன் பிளான்ட் அமைத்தல் பணி. | 10.00 |
| 3. | களக்காடு நகராட்சி வார்டு எண். 8, கீழக்கருவேலன்குளம் மேலத்தெரு வடக்கு பகுதி மற்றும் கீழக்கருவேலன்குளம் தெற்கு தெருவில் (266 மீ) வாறுகால் கட்டுதல். | 5.48 |

**அலுவலகக்குறிப்பு** :

இந்நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்ய (டைய்டு) திட்டத்தின் கீழ் பணிகள் செய்ய உரிய நிர்வாக அனுமதி வரப்பெற்றது மன்றத்தின் தகவலுக்கும் அங்கீகாரத்திற்கும்.